**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.1/2020 PW .1**

| | |
|---|---|
| பெயர் :அழகு | தந்தை/கணவர் பெயர்:கருப்பையா |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.07.2025

---

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)**

**<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எதிரி லெட்சுமணன் எனது அண்ணன் மகன் ஆவார். எதிரி சரஸ்வதி எனது கொழுந்தியா ஆவார். எனது குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் சின்னகருப்பன் என்ற கருப்பையா, சேவுகன், நல்லம்மாள், மீனா, வள்ளி, அமிர்தம், மரகதம், கனகு ஆவார்கள். அனைவருக்கும் திருமணம் முடிந்துவிட்டது. எனது பூர்வீக சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பானார் பெயரில் உள்ளதா என்றால் அவரவர் பெயரில் தனி பட்டாவில் உள்ளது. என் மீதும் மனைவி ரத்தினம், மகள், மகன் கண்ணன், பாண்டிமுருகன், மகாலெட்சுமி, லதா மற்றும் பேரன் தினேஷ்பாண்டி ஆகியோர் மீது நெற்குப்பை காவல்நிலைய குற்ற எண்.60/2018 வழக்கு உள்ளதா என்றால் உள்ளது.

2. மேற்படி வழக்கானது கொலை வழக்கு என்றால் சரிதான். கடந்த 28.01.2019 ம் தேதி பகல் 11.00–12.00 மணியளவில் சம்பவம் நடைபெற்றது. சம்பவத்திற்கு முதல் நாள் நான் எனது மகள் வீட்டில் இருந்தேன். நான் சம்பவம் அன்று நெற்குப்பை காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு ஊருக்கு வந்தேன். சேவுகன், சேவுகன் மகன் சொக்கலிங்கம், லெட்சுமணன், மற்றும் சரசு ஆகியோர் அவர்களது வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்தார்கள். எங்கள் வீடும் எதிரிகள் வீடும் பக்கத்து பக்கத்து வீடாகும். எதிரி வீட்டிற்கும் மற்றும் எனது வீட்டிற்கும் இடையில் முள்வேலி உள்ளது. எதிரிகள் சாலை வழியாக வந்து தான் எங்கள் வீட்டிற்கு வர முடியும். நான் எனது வீட்டிற்கு வரும் போது எதிரிகள் என்னை தடுத்தார்கள்.

3. சாலையில் எங்கள் வீட்டருகே வந்து தடுத்தார்கள். சேவுகன், சொக்கலிங்கம் எனக்கு அண்ணன் மற்றும் அண்ணன் மகன் ஆவார். கொலை வழக்கில் மேற்படியர் சாட்சியாக உள்ளார்கள். சேவுகன் மற்றும் சொக்கலிங்கம் வீடு 20 அடி தூரத்தில் உள்ளது. எதிரி என்னை பார்த்து ஆபாசமாக பேசினார்கள். எனது வீட்டிற்கு மின் வரி ரசீது எனத பெயரில் உள்ளது. எதிரி லெட்சுமணனுக்கு திருமணம் ஆகிவிட்டது. திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுக்கவில்லை. திருமணத்தின் போது எடுக்கப்பட்ட வீடியோவில் ஆய்வு செய்தால் உண்மை தெரியவரும் என்றால் நான் திருமணத்திற்கே போவில்லை. சம்பவத்தின் போது எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது மனைவிக்கும் பெரிய காயங்கள் இல்லை.

4. புகாரை நான் தான்கொடுத்தேன். அந்த புகாரில் எனக்கும் எனது மனைவிக்கும் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது புகாரில் எனது மனைவி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பதவத்தின்போது ஊர் அம்பலம் சுப்பிரமணியன் இருந்தார். ராசு மகன் சேவுகன் இருந்தார். சம்வத்தின் போது ஆடியோ மற்றும்வீடியோ ஆதாரங்கள் இணைத்து புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகைப்படம் மற்றும்வீடியோ ஆகியவற்றை நான் எடுக்கவில்லை. ஆனால் யாரோ புகைப்படம் மற்றும் வீடியோவை அனுப்பி இருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியவில்லை. சம்பவமே நடக்கவில்லை என்றாலும் இந்த கொலை வழக்கில் எதிரிகள் சாட்சிகள் என்பதால் அவர்களுக்கு எதிராக பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. 4 வது எதிரி சேவுகன் எனது அப்பா கருப்பையா உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். கடந்த 2024 ல் எனக்கும் மற்றும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் தகராறு ஏற்பட்டு எதிரியின் அப்பா இறந்து விட்டார் என்றால் இல்லை. அந்த வழக்கில் நான் பிணையில் உள்ளேன் என்றால் சரிதான். இந்த கொலை வழக்கில் சேவுகன், சொக்கலிங்கம் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். 3, 4 எதிரிகளின் தூண்டுதல் பெயரில் தான் 1,2 எதிரிகள் தாக்கியதாக சொல்லியுள்ளேன். என்ன தூண்டுதல் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3, 4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் சம்பவம் நடைபெற்றதற்கு சாட்சியம் உள்ளதாக போலீஸ் விசாரணையில் மற்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் 3 வது எதிரி நத்தத்தில் அம்மன் ஜீவல்லர்ஸ் என்று கடை நடந்தி வந்தார் என்றால் அது பற்றி தெரியாது.

6. 3 வது எதிரி காலை 09.00 முதல் இரவு 10.00 வரை நகை கடையில் இருப்பார் என்றால் சரியல்ல. 4 வது எதிரி சேவுகன் எஸ்விமங்கலம், காளாப்பூர், பிரான்மலை, முட்டாக்கட்டி ஆகிய பகுதியில் தினசரி வசூலுக்கு பணம் கொடுத்து வாங்கி வருவார் என்றாலும் மாலை 04.00 மணிக்கு தான் வீட்டிற்கு வருவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் 3, 4 எதிரிகள் பூசனிக்கலத்தில் இருந்தற்கான ஆவணங்கள் உள்ளதா என்று புகாரில் சொல்லியுள்ளேன். சம்பவம் அன்று 3, 4 எதிரிகள் தூண்டுதலின் பெயரில் சம்பவம் நடந்து இருந்தால் அதற்கான சாட்சிகளை குறிப்பிட்டுசொல்லியிருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லாததால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மேல் உள்ள கொலை வழக்கில் 3, 4 எதிரிகள் சாட்சியாக இருந்ததால் அவர்கள் சாட்சியம் அளிக்க கூடாது என்பதற்காக பொய் வழக்கு போட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 1/2020 PW .2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ரத்தினம் | தந்தை/கணவர் பெயர்:அழகு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.07.2025

---

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)**

**<u>19.07.2025 முதல் விசாரணை</u>:**

1. நான் நெற்குப்பையில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். அசா.1 எனது கணவர் ஆவார். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார். 28.01.2019 ம் தேதி காலை 11.00 முதல் 11.30 மணிக்குள் நானும் எனது கணவரும் எனது மகள் வீட்டில் 2 மாதம் தங்கிவிட்டு ஊருக்கு வந்தோம். அப்போது எதிரிகள் நால்வரும் எங்கள் வீட்டின் வாசல் படியில் நின்றுகொண்டிருந்தார்கள். நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போக கூடாது உங்களுக்கு வீடு, வாசல் இல்லை என்று தேவிடியா பயலே என்று பேசி எதிரி லெட்சுமணன் தள்ளு முள்ளு ஏற்படுத்தி அடிக்க வந்தார்.

2. சேவுகன், சொக்கலிங்கம் ஆகியோர் அருவாளை எடுத்து வெட்டுடா என்று சொன்னார்கள். அப்போது அருவாளை லெட்சுமணன் எடுத்து வந்து எனது கணவரை வெட்டவந்தார். நான் அதை தடுத்தேன். எதிரி சரஸ்வதி மண்வெட்டியால் வலது புறம் தோள் பட்டையில் அடித்தார். நான் கீழே விழுந்து விட்டேன் .அப்போது லெட்சுமணன் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் உன்னை கருவருக்காமல் விடமாட்டேன் உன் சாவு என் கையில் தான் என்று சொன்னார். ராசு மகன் சேவுகன், சுப்பிரமணியன் அம்பலக்கார் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள். அதன்பிறகு நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அது சம்பந்தமாக போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. எதிரி லெட்சுமணன் எனது கொழுந்தன் மகன் ஆவார். எதிரி சரஸ்வதி எனது கொழுந்தன் மனைவி ஆவார். எனது குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும்

சொத்து சம்பந்தமான பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சொத்துக்கள் எனது கணவர் பெயரில் உள்ளது. என் கணவர் மீதும் என் மீதும், மகள், மகன் கண்ணன், பாண்டிமுருகன், மகாலெட்சுமி, லதா மற்றும் பேரன் தினேஷ்பாண்டி ஆகியோர் மீது நெற்குப்பை காவல்நிலைய குற்ற எண்.60/2018 வழக்கு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வழக்கானது கொலை வழக்கு என்றால் சரிதான்.

4. கடந்த 28.01.2019ம் தேதி பகல் 11.00–11.30 மணியளவில் சம்பவம் நடைபெற்றது. சம்பவத்திற்கு முதல் நாள் நான் எனது மகள் வீட்டில் இருந்தேன். நான் சம்பவம் அன்று நெற்குப்பை காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு ஊருக்கு வந்தேன். சேவுகன் ,சேவுகன் மகன் சொக்கலிங்கம், லெட்சுமணன், மற்றும் சரசு ஆகியோர் அவர்களது வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்தார்கள். எங்கள் வீடும் எதிரிகள் வீடும் பக்கத்து பக்கத்து வீடாகும். எதிரி வீட்டிற்கும் மற்றும் எனது வீட்டிற்கும் இடையில் முள்வேலி உள்ளது. எதிரிகள் சாலை வழியாக வந்து தான் எங்கள் வீட்டிற்கு வர முடியும். எனது வீட்டின் கதவு பூட்டப்பட்டு இருந்தது. ஆனால் ஓடு உடைந்து இருந்தது. 10, 20 ஓடுகள் உடைந்து சிதறி கிடந்தது. நான் எனது வீட்டிற்கு வரும் போது எதிரிகள் என்னை தடுத்தார்கள். சாலையில் எங்கள் வீட்டருகே வந்து தடுத்தார்கள். எதிரிகள் எங்களை அடிக்கும் போது 5, 6 நபர்கள் இருந்தார்கள். எனது வீட்டிற்கு மின் வரி ரசீது எனது கணவர் பெயரில் உள்ளது. எதிரி லெட்சுமணனுக்கு திருமணம் ஆகிவிட்டது. திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுக்கவில்லை. திருமணத்தின் போது எடுக்கப்பட்ட வீடியோவில் ஆய்வு செய்தால் உண்மை தெரியவரும் என்றால் நான் திருமணத்திற்கே போவில்லை.

6. சம்பவத்தின் போது எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். புகாரை எனது மருமகன் எழுதி கொடுத்தார். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று படித்து காண்பித்தார்கள். அந்த புகாரில் எனக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தார்கள். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டேன். மருத்துவர் பெயர் தெரியாது. மருத்துவர் எனது வீட்டிற்கு வந்து சிகிச்சை கொடுத்தாரா என்றால் எனது மகள் வீட்டில் வைத்து சிகிச்சை கொடுத்தார். எனது மகள் ஊர் நெல்மேனிபட்டி ஆகும். நெல்மேனிப்பட்டிக்கும் நெற்குப்பைக்கும் சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும். எனக்கு காயம் ஏற்பட்ட உடன் எதிரிகள் தொந்தரவு செய்ததால் எனது மகள்வீட்டிற்கு எனது கணவர்அழைத்துசென்றுவிட்டார்.

சம்பவத்தின் எனது கணவருக்கு பெரிய காயங்கள் இல்லை. அந்த புகைப்படம் மற்றும் வீடியோ ஆகியவற்றை நான் எடுக்கவில்லை. ஆனால் யாரோ புகைப்படம் மற்றும் வீடியோவை எடுத்து எனது பேயரன் செல் போனிற்கு அனுப்பி இருந்தார்கள். சம்பவத்தை நானோ, எனது கணவரோ கண்ணுற்ற சாட்சிகள் எடுத்திருக்க முடியும் என்றால் சரிதான். அவர்கள் பெயர் தெரியவில்லை. சம்பவமே நடக்கவில்லை என்றாலும் இந்த கொலை வழக்கில் எதிரிகள் சாட்சிகள் என்பதால் அவர்களுக்கு எதிராக பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

7. 4 வது எதிரி சேவுகன் எனது கணவர் அழகு உடன் பிறந்தவர் என்றால் சரிதான். கடந்த 2018 ல் எனக்கும் மற்றும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் தகராறு ஏற்பட்டு எதிரியின் அப்பா இறந்து விட்டார் என்றால் இல்லை. அந்த வழக்கில் நான் பிணையில் உள்ளேன் என்றால் சரிதான். இந்த கொலை வழக்கில் சேவுகன், சொக்கலிங்கம் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். 3, 4 எதிரிகளின் தூண்டுதல் பெயரில் தான் 1,2 எதிரிகள் தாக்கியதாக சொல்லியுள்ளேன். என்ன தூண்டுதல் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3, 4 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் சம்பவம் நடைபெற்றதற்கு சாட்சியம் உள்ளதாக போலீஸ் விசாரணையில் மற்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் 3 வது எதிரி நத்தத்தில் அம்மன் ஜீவல்லர்ஸ் என்று கடை நடந்தி வந்தார் என்றால் அது பற்றி தெரியாது.

8) 3 வது எதிரி காலை 09.00 முதல் இரவு 10.00 வரை நகை கடையில் இருப்பார் என்றால் சரியல்ல. 4 வது எதிரி சேவுகன் எஸ்விமங்கலம், காளாப்பூர், பிரான்மலை, முட்டாக்கட்டி ஆகிய பகுதியில் தினசரி வசூலுக்கு பணம் கொடுத்து வாங்கி வருவார் என்றாலும் மாலை 04.00 மணிக்கு தான் வீட்டிற்கு வருவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அன்றைய தேதியில் 3, 4 எதிரிகள் தினசரி வேலைக்கா சென்று விட்டு மாலை 04.00 மணிக்கு தான் வந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் 3, 4 எதிரிகள் பூசனிக்கலத்தில் இருந்தற்கான ஆவணங்கள் உள்ளதா என்று புகாரில் சொல்லியுள்ளேன். சம்பவம் அன்று 3, 4 எதிரிகள் தூண்டுதலின் பெயரில் சம்பவம் நடந்து இருந்தால் அதற்கான சாட்சிகளை குறிப்பிட்டுசொல்லியிருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லாததால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மேல் உள்ள கொலை வழக்கில் 3, 4 எதிரிகள் சாட்சியாக இருந்ததால் அவர்கள் சாட்சியம் அளிக்க கூடாது என்பதற்காக பொய் வழக்கு போட்டு

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.